127 வருட பாரம்பரியமிக்க

# எல்.ஜி. பெருங்காயத்தின் தரத்தை அறிய உதவும் QR ஸ்கேன் கோடு

## போலி தயாரிப்புகளை எளிதில் கண்டுபிடிக்கலாம்

127 வருட பாரம்பரியமிக்க எல்.ஜி. பெருங்காயத்தின் தரத்தை அறிய QR ஸ்கேன் கோடு பயன்படுத்தி, போலியான தயாரிப்புகளை எளிதில் கண்டுபிடிக்கலாம் என்று எல்.ஜி. பெருங்காயம் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து அவர்கள் மேலும் கூறியதாவது:-

### சமையலில் பெருங்காயத்தின் பங்கு

சாதாரண சமையலைக்கூட விருந்து போல கமகமக்கவைக்கும் வலிமை, வாசனை திரவியங்களுக்கு இருக்கிறது. அதிலும் இந்திய உணவுகளில் வாசனை திரவியங்களின் பங்கு அளப்பரியது. இது நல்ல சுவையான உணவைச் சாப்பிட்ட திருப்தியை தரும்.

அந்தவகையில் இந்திய சமையலில் பெருங்காயத்துக்கு எப்போதுமே மிகப்பெரிய பங்கு உண்டு என்பதை மறுக்கவே முடியாது. சாம்பார், ரசம், மோர் என எதில் பெருங்காயத்தைக் கலந்தாலும் அதன் வாசனை கண்டி இழுக்கும். உணவின் மணமும், சுவையும் கூடிவிடும். எந்தளவுக்குச் சுவையும், மணமும் தருகிறதோ அதே அளவுக்கு மருத்துவக் குணங்களும் பெருங்காயத்துக்கு உண்டு. பழங்காலந்தொட்டே நம் சமையலறையில் தனக்கென ஓர் தனி இடத்தைப் பிடித்து வைத்திருக்கிறது பெருங்காயம்.

### எல்.ஜி. நிறுவன தயாரிப்பு

அந்தவகையில் பெருங்காய தயாரிப்பில் தனித்துவ இடத்தை பிடித்து, மக்களின் மனதில் தனக்கென தனி முத்திரை பதித்து, முன்னணி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது லால்ஜி கோது அண்ட் கோ. பெருங்காயம் என்றாலே மக்களின் மனதில் உடனடியாக வருவது எல்.ஜி. பெருங்காயம் தான்.

1894-ம் ஆண்டு தொடங்கப்பட்ட லால்ஜி கோது அண்ட் கோ நிறுவனம், தரமான பெருங்காய தயாரிப்பை முன்னெடுத்து வருகிறது. தரம், சுவை, நறுமணம் என வாடிக்கையாளர்கள் மனது விரும்பும் வகையில் பெருங்காயத்தை தயாரித்து விற்பனை செய்துவருகிறது. கடைக்கு சென்று பெருங்காயம் வாங்க வேண்டும் என்று நினைப்பவர்களின் முதல் விருப்பம் எல்.ஜி. கட்டி பெருங்காயமாகத்தான் இருக்கிறது. அந்தளவு எல்.ஜி. நிறுவனத்துக்கு மக்கள் மத்தியில் நல்ல பெயர் இருக்கிறது.




### போலியாகவும் தயாரிப்பு

இந்தநிலையில் எல்.ஜி. நிறுவனம் பெயரில் சட்ட விரோதமாக பெருங்காயம் தயாரிக்கப்பட்டு சந்தைகளில் புழக்கத்துக்கு வருகின்றன. இதனை தடுக்க தொடர் முயற்சிகள் கையாளப்பட்டு வருகின்றன. ஏராளமான இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் மூட்டை மூட்டைகளாக எல்.ஜி. பிராண்ட் பெயர் பொறிக்கப்பட்ட பெருங்காய டப்பாக்கள் பறிமுதல் செய்யப்பட்டு இருக்கின்றன.

கைப்பற்றப்பட்ட பெருங்காய டப்பாக்கள் அச்சு அசலாக எல்.ஜி. தயாரிப்பு போலவே இருப்பதுதான் வேதனையின் உச்சம். பெருங்காயத்தின் உட்பொருட்கள் என்னவென்றே தெரியாத நிலையில் போலி நபர்கள் மூலம் உரிய தரமின்றி தயாரிக்கப்பட்டு, வெளிச்சந்தையில் எல்.ஜி. நிறுவனம் பெயரில் விற்பனைக்கு வருகின்றன. இந்த சட்டவிரோத நடவடிக்கையை சிலர் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

### தொடர் போராட்டம்

இத்தகைய பொருட்களை தயாரிப்பவர்கள் எங்கள் நிறுவனத்தில் பயன்படுத்துவதை போல உயர்ந்த தரமான பொருட்களை பயன்படுத்துவது கிடையாது. இதனால் குறைந்த விலையில் கடைக்காரர்களுக்கு பொருட்களை விற்பனை செய்து வருகிறார்கள். இது பலருக்கு தெரிவது கிடையாது.

குறைந்த விலைக்கு கிடைப்பதால் பெரிய வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் இது போன்ற போலி நபர்களிடம் இருந்து பொருட்களை பெற்று மக்களிடம் விற்கிறார்கள். இதனால் வழக்கமான லாபத்தை காட்டிலும் அதிக லாபம் கிடைக்கிறது. எனவே இந்த நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை போடுவது சவாலான காரியமாகவே இருக்கிறது. எங்கள் நிறுவனம் தொடங்கப்பட்ட 1894-ம் ஆண்டில் இருந்து இந்த பிரச்சினையை எதிர்கொண்டு வருகிறோம். இதனை தடுக்கவும் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு போராடி வருகிறோம்.

### போலீசார் நடவடிக்கை

சமீபத்தில் கூட போலி பெருங்காயம் தயாரிப்பு குறித்து எங்கள் நிறுவனம் சார்பில் சென்னை காவல்துறையில் புகார்கள் அளிக்கப்பட்டது. இதையடுத்து போலீசாரும் நடவடிக்கை மேற்கொண்டு எல்.ஜி. நிறுவனம் பெயரில் போலியாக பெருங்காயம் தயாரித்து விற்பனை செய்துவந்த 13 பேரை அதிரடியாக கைது செய்தனர். மேலும் எம்.ஜி.ஆர். நகர் போலீசார் போலியான லேபிள்களுடன் இருந்த 115 கிலோ பெருங்காயத்தை பறிமுதல் செய்தனர். குரோம்பேட்டையில் கூட 2 பேரிடம் இருந்து 100 கிலோ அளவில் போலி பெருங்காயம் கைப்பற்றப்பட்டன.

இதேபோல தாம்பரம், கண்ணகிநகர், சங்கர்நகர் போலீசார் 11 பேரை கைது செய்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மேலும் போலி சரக்குகளை விற்பனை செய்த கடை உரிமையாளர்கள் மற்றும் நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. இத்தகைய மோசடியில் ஈடுபட்டு வருபவர்கள் மீதும் நடவடிக்கை பாய்ந்து கொண்டு இருக்கிறது.

### ஹாலோகிராம், QR கோட்

எது எப்படி இருந்தாலும் எங்கள் வாடிக்கையாளர்களை காப்பாற்றும் கட்டாயத்தில் நாங்கள் இருக்கிறோம். காரணம் எங்கள் நிறுவனம் பெயரை நம்பி பொருட்கள் வாங்கும் வாடிக்கையாளர்கள், போலியான பொருட்களால் பாதிப்புக்கு ஆளாகலாம். எனவே ஒரிஜினல் எது? போலி எது? என்று வாடிக்கையாளர்கள் நிச்சயம் தெரிந்துகொள்வது அவசியம். அதற்காக புதிய முயற்சியை கையாண்டு இருக்கிறோம்.

அதன்படி தற்போது மார்க்கெட்களில் விற்பனை செய்யப்படும் எங்களது எல்.ஜி. பெருங்காய தயாரிப்புகளில் ஹாலோகிராம் மற்றும் QR கோட் உள்ளது. எனவே பொருட்களை வாங்கும் முன்பு வாடிக்கையாளர்கள் QR கோட்டை ஸ்கேன் செய்ய வேண்டும். அப்படி செய்யும்போது அந்த பொருள் உண்மையிலேயே தரமான எல்.ஜி. நிறுவன தயாரிப்பா? அல்லது போலியா? என்பதை வாடிக்கையாளர்கள் கண்டுபிடித்து விட முடியும். அதாவது ஸ்கேன் செய்கையில் URL ஆனது, லால்ஜிகோது என்று வந்தால் அது தரமான தயாரிப்பாகும். இதை உறுதி செய்யும்வகையில் பச்சை நிறத்தில் டிக் குறியீடு தோன்றும். அப்படி எதுவும் இல்லையெனில் உடனடியாக எங்கள் கஸ்டமர்கேர் குழுவினர் உங்களை தொடர்பு கொள்வார்கள்.

### தரமான தயாரிப்பு தானா?

இதற்காக சற்று கூடுதல் நேரம் செலவழிக்க நேரிடும். ஆனாலும் எல்.ஜி. நிறுவனத்தின் தரமான தயாரிப்பு தானா? என்பதை அறிந்து வாங்க முடியும். நமது பணமும் மிச்சமாகும், உடல்நலமும் காப்பாற்றப்படும். எங்களது இந்த புதிய நடவடிக்கைக்கு வாடிக்கையாளர்கள் ஆதரவு நிச்சயம் இருக்கும் என்று நம்புகிறோம். தரம், உடல்நலம், செலவு இவற்றை கருத்தில்கொண்டால் சில நிமிட நேர விரயம் கூட தேவையானது தான் என்று வாடிக்கையாளர்கள் கருதி, நிச்சயம் எங்கள் நடவடிக்கைக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று எல்.ஜி. பெருங்காயம் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் விவரங்களுக்கு:- www.laljeegodhoo.com